மயிலாடுதுறை மாவட்டம் - குத்தாலம், திருவாலங்காடு கிராமத்தில்

# வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.26-

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம், திருவாலங்காடு கிராமத்தி லுள்ள தனியார் வெடி உற்பத்தி மையத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கிட வும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு :

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டம், திருவாலங்காடு கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான வெடி உற்பத்தி மையத்தில் (24.08.2024) பிற்பகல் சுமார் 01.00 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் திருவாவடு துறை கிராமம். மேலப் புதுத்தெருவைச் சேர்ந்த திரு.கர்ணன் (வயது 45) த/பெ. உத்திரம் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழுந்தார், மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த லட்சுமணன் (வயது 45) த/பெ.சுப்பிரமணி யன் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் காயமடைந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் கலியபெருமாள் மற்றும் குமார் ஆகிய இருவருக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

# பூவிருந்தவல்லியில் கிழக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

திருவள்ளூர், ஆக.26-

திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரை யற்றினார். உடன் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், டி.தேசிங்கு, ஜி.ஆர்.திருமலை, தி.வே.முனுசாமி, த.எத்திராஜ், எம்.முத்தழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், சன்.பிரகாஷ், பரமேஸ்வரி கந்தன், இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், டி.அண்ணாமலை, ஏ.ஜனார்த்தன், எம்.இளையான், ஏ.ஆர்.பாஸ்கர், சுமதி குமார், கே.எஸ்.புகழேந்தி, ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், ஜி.எஸ்.சங்கீதா, ஏ.ஜி.ரவி, என்.சண்முகம், பேட்டை திருமலைராஜ், வி.தணிகாசலம், எம்.ராம்பாபு, சாந்தி ஜனார்த்தன், ஜி.சி.சி. கருணாநிதி, அக்னி ராஜேஷ், கே.ஜி.ஆர்.எஸ்.ஸ்டாலின், கேசவன், திருலோகசுந்தர், சய்மோகன், பவானி, பரிமளழகன், சுமதி, செந்தமிழரசன் உள்பட பலர் உள்ளனர்.

சமூகம் நினைத்துக் கொண்டிருப்பதைவிட

# மதிப்புமிக்கவர் கலைஞர்!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



மாண்புமிகு
முதலமைச்சரைச் சந்தித்தேன்

வெளிநாட்டுப் பயணத்துக்கு
வாழ்த்தும்
கலைஞர் படைப்புகளின்
நாட்டுடைமைக்கு
நன்றியும் தெரிவித்தேன்

கலைஞர் நூற்றாண்டு
நினைவு நாணயத்தை
எனக்கவர் பரிசளித்தார்;
மகிழ்ந்து போனேன்

வீட்டுக்கு வந்ததும்
கலைஞர்
எனக்களித்த பேனாவுக்குப்
பக்கத்தில் வைத்துப்
பத்திரப் படுத்தினேன்

கலைஞருக்கும்
இந்த நாணயத்துக்கும்
ஓர் ஒற்றுமை உண்டு

35 கிராம் எடைகொண்ட
இந்த நாணயம்
50 விழுக்காடு வெள்ளி
40 விழுக்காடு பித்தளை
5 விழுக்காடு நிக்கல்
5 விழுக்காடு துத்தநாகம்
கொண்டது

இதன் இந்திய மதிப்பான
100 ரூபாயைவிட



இதன் தயாரிப்புச் செலவு
கூடுதல் மதிப்புடையது

அப்படித்தான்...

இந்தச் சமூகம்
நினைத்துக்கொண்டிருப்பதைவிடக்
கலைஞரும் மதிப்பு மிக்கவர்

கவிப்பேரரசு
வைரமுத்து



போலி பேராசிரியர்கள் நியமனம்!

# தவறு செய்திருந்தால் கடும் நடவடிக்கை!

## உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி எச்சரிக்கை!



சென்னை, ஆக. 26 -

தமிழகத்தில் போலி பேராசிரியர்கள் நியமனம் தொடர்பாக குழு அமைத்து விசாரணை நடத்தி யார் தவறு செய்திருந்தாலும் அவர்கள் மீது திமுக அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் அமைச்சர் பொன்முடி பேட்டியளித்துள்ளார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள எம் சி சி பள்ளியில் கல்வி மேம்பாட்டிற்கான கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், வில்சன் எம்.பி. ஆகியோர் சிறப்பு விருந்தி னராக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.

**அமைச்சர் மனோ தங்கராஜ் பேச்சு**

சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என கோரிக்கை வைத்தனர். தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தான். கல்வி நிறுவனங்களும் அவைகள் சந்தித்து வரும் பிரச்சனைகள் குறித்தும் அமைச்சர் பொன்முடிகளு நன்றாக தெரியும் என்பதால் நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டார்.

கல்வி முற்றிலுமாக மறுக்கப்பட்ட சமுகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தோம். அந்நிலையை போக்கும் ஆயுதமாக மீண்டும் கல்வி பிறந்தது. குறிப்பாக 17 சதவீதம் கிறிஸ்துவர்கள் உயர்ந்த பொறுப்பில் இருந்த நிலையில் தற்போது 1 சதவீதம் தான் உள்ளார்கள் என்பதை உற்று கவனிக்க வேண்டியது.

மேலும் மற்ற ஒரு சமூகம் சதவிதத்தில் இருந்து 70 சதவீதம் உயர்ந்துள்ளது. பொதுவான உரிமை சிறுபான்மை மக்களுக்கு மறுக்கப்படுகிறது. தனியாக வழங்கப்பட்ட உரிமைகளிலும் பிரச்சினை உள்ளது. இந்த இரண்டாம் நிலை சிறுபான்மை மக்களுக்கு இல்லை என்பது என் கருத்து. எல்லோரும் சமம் என்ற தன்மை வர வேண்டும். இது நமக்கான அச்சுறுத்தல் இல்லை; தேசத்திற்கான அச்சுறுத்தல் இதற்கான விழிப்புணர்வு வேண்டும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் கூறினார்.

**அமைச்சர் பொன்முடி**

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் க.பொன்முடி பேசியதாவது:

தமிழகத்தை பொறுத்தவரையில் அதிக அளவில் ஏற்றத்தாழ்வை நீக்கி பொதுமக்களுக்கு கல்வி கொடுத்ததில் கிறிஸ்தவ மிஷனரிகளுக்கு பெரும் பங்கு உள்ளது. குறிப்பாக அன்றைய காலகட்டத்தில் திருநெல்வேலி கன்னியாகுமரி போன்ற பகுதிகளில் சேர்ந்தவர்களே அதிக அளவில் கல்வி பயின்றவர்களாக இருந்தார்கள். அதற்கு மிக முக்கிய காரணம் அங்கு இருந்த கிறிஸ்தவ மிஷனரிகளே.

இதன் காரணமாக தான் முத்தமிழர் கலைஞர் அவரது ஆட்சி காலத்தில் சிறுபான்மையினர் வாரியம் என்கின்ற ஒன்றை அமைத்தார். அதன் காரணமாக பல சிறுபான்மையினர் பெருமளவில் பயனடைந்தார்கள். குறிப்பாக திராவிட மாடல் தமிழ்நாடு அரசு சார்பில் சிறுபான்மை யினருக்கான பல்வேறு நலத்திட்டங்களையும் தொலைநோக்கு திட்டங்களையும் நமது முதல்வர் கொடுத்து உள்ளார். இதன் பெயர் தான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

பள்ளிகளின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றால் அவர்கள் படிக்கும் பொழுது பலதரப்பட்ட தரவுகளை உள்வாங்க கூடிய அளவில் ஒரு சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிறப்பாக அப்படிப்பட்ட ஒன்று தான் தமிழ்நாடு அரசால் முதல் அமைச்சரின் பெயரால் கொண்டுவரப்பட்ட நான் முதல்வன் திட்டம். குறிப்பாக இளைஞர் திறன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி அவர்கள் தான் தற்பொழுது நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அனைத்து இளைஞர்களையும் பலதரப்பட்ட தரவுகளையும் உள்ளடக்கி அளிக்கக்கூடிய நான் முதல்வன் பயிற்சியின் மூலம் தேர்ச்சி பெற செய்து வருகிறார்.

நாங்கள் சிறு வயதில் பள்ளியில் பயிலும் பொழுது மதிய உணவு கேட்டாலே எங்கள் பெற்றோர்கள் வேலைக்குச் செல்ல வேண்டும் என கூறி சென்று விடுவார்கள். ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி காலை சிற்றுண்டிகையே ஆரம்பப் பள்ளிகளில் தர வைத்தவர் தான் நமது முதல்வர். அன்றைய காலகட்டத்தில் நாங்கள் அனைவரும் விடுதியில் தங்கி கல்லூரி படிப்பது என்பது மிகவும் சிரமமான ஒன்று. ஏனெனில் அந்த அளவிற்கு யாருக்கும் வருமானம் இருந்தது கிடையாது இதை நன்கு உணர்ந்த நமது முதல்வர் புது மைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் என்கின்ற பெயரில் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக அரசு உதவி பெறும் பள்ளிகளின் படிக்க எழுத அவைகளுக்கும் மாணவிகளுக்கும் அறிவித்து வழங்கி வருகிறார்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் வேற்றுமையில் ஒற்றுமை பல்வேறு வேற்றுமைகள் இருந்தாலும் சமத்துவம் என்கின்ற ஒன்றை அடையும்வரை அனைவருக்கும் சலுகைகளை கொடுத்தாக தான் வேண்டும். சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் கூறியதை போல இங்கு ஜாதி பெயரைத் தூரி பல வேற்றுமைகள் உள்ளது. அதனை ஒழிக்க தான் வேண்டும். பிற்படுத்தப்பட்டவர் மற்றும் மிகவும் பிற்படுத்த ப்பட்டோர் என்கின்ற துறை மட்டும் இருந்த வேளையில் அவற்றுடன் சிறுபான்மையினர் துறையும் சேர்த்தவர் தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர். சிறுபான்மைக்காக அதிக அளவில் உழைத்த அரசு தான் திராவிட மாடல் அரசு என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

இவ்வாறு அமைச்சர் க. பொன்முடி பேசினார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அமைச்சர் பொன்முடி கூறுகையில்,

சிறுபான்மையின பள்ளியில் பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கு இன்று நான் முதல்வன் திட்டம் எல்லா இடத்திலும் அமல்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாக சிறுபான்மையின பள்ளிகளிலே படிக்கின்ற மாணவ மாணவிகளுக்கும் உயர்கல்விக்கு சென்றால் அவர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிப்பையும் தமிழக முதல்வர்கள் அறிவித்து அதையும் பயன்படுத்திக் கொண்டிருகிறார்.

இந்தியாவிலேயே கல்வி வளர்ச்சிக்கு முன்னோடி மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. பள்ளி கல்லூரிகளுக்கு அருகில் போதைப்பொருள் விற்பனை செய்தால் கடுமையான தண்டனை வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

போதை கலச்சாரம் ஒழிக்கப்பட வேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். போலி பேராசிரியர்கள் நியமனம் தொடர்பாக குழு அமைத்து விசாரணை மேற்கொண்டு வருகிறோம். யார் தவறு செய்திருந்தாலும் அவர்களை இந்த அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மனோ தங்கராஜ் கூறுகையில்,

தமிழக முதல்வர் பல சமூகங்களை ஒன்றிணைத்து அவற்றின் முன்னேற்றத்தி ற்காகவும் சமத்துவத்திற்காகவும் அரும் பாடு பட்டு வருகிறார். இதன் காரணமாக தான் சமத்துவ வழியில் பெண்கள் , விளிம்பு நிலை மக்கள் என அனைவரும் முன்னேற்றத்தை அடைந்து வருகிறார்கள்.

குறிப்பாக கல்விலும் வேலை வாய்ப்பிலும் யாருக்கும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஒரு முன்னேற்றம் தொடர்ந்து தமிழக அரசு மேற்கொண்ட பல திட்டங்களின் வாயிலாக வளர்ச்சி அடைந்து வருகிறார்கள். இதன் காரணமாக தான் இன்னும் நூறாண்டு காலங்கள் கூட திராவிட அரசியல் இந்த மண்ணில் இருக்க வேண்டிய அவசியம் தேவை இருக்கிறது.

நானும் முத்தமிழ் அறிஞர் கலைஞரும் பல மேடைகளில் பெருமைப்படுத்தி மேடைகளில் பேசியுள்ளோம். திமுக அரசு பெருந்தலைவர் காமராஜரை புறக்கணித்து பேசுகிறது என்பது மிகவும் ஒரு தவறான கருத்து. பல உலக நாடுகளுக்கு சென்று வந்துள்ளேன் . அதன் அடிப்படையில் தான் இந்தியாவில் மட்டும் தான் சாதி ரீதியில் பல வன்முறைகள் பல புறக்கணிப்புகள் நடைபெற்று வருகிறது என குறிப்பிட்டுள்ளேன்.

வட மாநிலங்களில் காந்தியத்தை அடிப்படையாகக் கொண்டு பல வன்முறைகள் அதிக அளவில் நடைபெற்று உள்ளது . ஆனால் தமிழகத்தில் அவை இல்லை என்றால் அதற்கு திராவிட மாடல் அரசு தான் காரணம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மனோதங்கராஜ் கூறினார்.

என்.கௌதமன் தலைமை! மகா.குமார் வரவேற்புரை ! தலைஞாயிறில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 101 வது பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரை!

நாகை, ஆக.26-

ஞாயிறு ஒன்றிய கழகம் மற்றும் பேரூர் கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம். இன்று (26.8.2024 -திங்கட்கிழமை) மாலை 6.00 மணிக்கு தலைஞாயிறு கடைத்தெருவில் நடைபெறுகிறது. கூட்டத்திற்கு நாகை மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் தலைமை தாங்குகிறார். தலைஞாயிறு ஒன்றிய கழக செயலாளர் மகா.குமார் வரவேற்புரையாற்றுகிறார்.. கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி ஆகியோர் சிறப்புரையாற்று கிறார்கள். கூட்டத்தில். தாட்கோ தலைவர் உமதிவாணன், மாநில விவசாய அணி துணை தலைவர் எஸ். கே. வேதாரத்தினம், மாநில தீர்மான குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், மாவட்ட அவைத்தலைவர் ப.செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க. இராஜேந்திரன், இல.மேசுநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன். ஆரூர்.

மணிவண்ணன், கற்பகம், பொருளாளர் மு.லோகநாதன் மாநில மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், .கே.பழனியப்பன். செல்வ. செங்குட்டுவன், ஆர். டி.எஸ்.சரவணன், சிக்கல் என்.ஆனந்த் சோ.பா.மலர் வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் மா.மீ.புகழேந்தி, இராமாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார். பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.ஈ.பழனியப்பன், உமாசெந்தாமரை செல்வன், எம்.பன்னீர்செல்வம், எஸ்.பி.டி.சார்லஸ், எம்.பாண்டியன், கோசி. குமார், இலபழனியப்பன், பேரூர் கழகச் செயலாளர்கள் முகமது கல்தான், மரிய சார்லஸ், கா.அட்சயலிங்கம், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, அபாரிபாலன், இரா.முருகையன், ப.உதயக்குமார். ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, கேஸ் வி.செந்தில், எஸ்.வி.டி.அருள், பி.முருகானந்தம், எஸ்.பால்ராஜ், இளம். சுந்தர், ஆர். சுரேந்தர், த.மயந்தி, கே.எஸ்.சாகுல்ஹமீது, ஆர். ஆர்.குலோத்துங்கன், மு.தினோ ஷ்குமார், எஸ். புவனேஷ்வரி, ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, க.சத்தியமூர்த்தி எஸ்.சந்தோஷ், வி.கமல், சி.முகுந்தன், எஸ். வெற்றிசெல்வன், எஸ்.பாலமுரளி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ். அசோக், ஜி.தாமோதரன், கே சுரேஷ், டி. கலையழகன்,எஸ்.சத்யா, கு.பன்னீர் செல்வம், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் கௌசல்யா இளம் பரிதி மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் வி. சோழன், செல்வி வீரமணி, ஒன்றிய குழு தலைவர்கள் செல்வராணிஞானசேகரன், வாசுகிநாகராஜன் வே அனுசியா பேரூராட்சி மன்ற தலைவர்கள் எல். டயானா சர்மிளா, இந்திரா காந்தி சேகர், தலைஞாயிறு ஒன்றிய கழக, பேரூர் கழக நிர்வாகிகள் ஆர்.டி.ராஜமாணிக்கம், எம்.தமிழ்மணி, கே.என்.வி.ரவி, கா. அண்ணாதுரை, ஆர்.அமுதா, வி.பி. முருகானந்தம், எம். ஜெகதீசன், எஸ் தனலட்சுமி, வி.மாரியப்பன், வி. அன்பழகன், ஆர்.ஆரோக்கியம், வி.பி. மச்சழகன், ஏ.ரவிச்சந்திரன், பி. வீரகுமார், எஸ்.ஹைதரலி கா. வீரசேகரன், ப.ராஜேந்திரன் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உங்க பேரூர் கலக நிர்வாகிகள் கிளை வார்டு கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகள்பிரதிநிதிகள்,வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து. கொள்கின்றனர். முடிவில் தலைஞாயிறு பேரூர் கழக செயலாளர் சி.சுப்பிர மணியன் நன்றி கூறுகிறார்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம் (ஆறாவது பட்டியல்)

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் சேலம், ஈரோடு, திருச்சி கிழக்கு, தூத்துக்குடி ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சேலம் மத்திய மாவட்டம்**
**சேலம் மாநகரம்**

**அமைப்பாளர் :** எம். மணிகண்டன், எம்.பி.ஏ., நெ.15, டி29, கண்ணன் தெரு, சேலம் – 1.

**துணை அமைப்பாளர்கள் :** ப. இளஞ்செழியன், எம்.காம்., சி.ஏ., நெ.318, கோமுட்டிக்காடு, நரசோதிப்பட்டி, சேலம். எஸ். சுந்தர், டி.எம்.இ., நெ.37, புது தெரு - 2, பொன்னம்மாபேட்டை, சேலம். அழகாபுரம் ஜெ. மோகன், பி.காம்., நெ.2/91பி, பாவை வட்டம், சேலத்தாம்பட்டி, சூரமங்கலம், சேலம். டி. இந்துஜா, பி.டெக்., நெ.133/134, வாசக சாலை தெரு, பொன்னம்மாபேட்டை, சேலம். ஏ.சீனிவாசன், பி.ஏ., நெ.91/ஏ, கிழக்கு இரயில்வே காலனி, ஜங்சன், சேலம்.

**ஈரோடு தெற்கு மாவட்டம்**
**ஈரோடு மாநகரம்**

**அமைப்பாளர் :** என். ஸ்ரீதர், டி.ஐ.டி., ஏ.பி.என். கார்டன், பெரிய செட்டிபாளையம், புதூர், ஈரோடு – 2.

**துணை அமைப்பாளர்கள் :** ஆர். நல்லசிவம் (எ) சிவா, பி.காம்., சி.ஏ., பொய்யரிக்கரை வீதி, பயர் சர்வீஸ் பின்புறம், ஈரோடு 1. எம். மணிகண்டன் (எ) சிவா, டி.எம்.இ., நெ.36/1, சின்னமுத்து மெயின் வீதி, இடையன்காட்டு வலசு, ஈரோடு 638 011. கு. தனராஜா, பி.இ., நெ.13, வேலப்பக்கவுண்டன் வலசு, வில்லரசம் பட்டி, ஈரோடு – 7. பா. சத்தியவதி, எம்.எஸ்.சி. பி.எட்., கொல்லம்பாளையம், ஈரோடு. பி. விஜயகுமார், எம்.ஏ., பி.எல்., நெ.70/10பி, டவர்லைன் காலனி, சரோஜினி நகர், ஈரோடு 11.

**திருச்சி தெற்கு மாவட்டம்**
**திருச்சி கிழக்கு மாநகரம்**

**அமைப்பாளர் :** ஏ. முகமது அசாருதீன், டி.சி.இ., நெ.33/ஏ, ஏ.எம்.ஏ. இல்லம், வ.உ.சி. நகர்,3வது நகர், திருவெறும்பூர், திருச்சி – 13.

**துணை அமைப்பாளர்கள் :** பி. செந்தாமரை கண்ணன், டி.சி.இ., நெ.168எச்/1, கீழ படையாச்சி தெரு, பாலக்கரை, திருச்சி01. பி. கீதா, எம்.சி.ஏ., நெ.62ஏ/2, இலுப்பூர் ரோடு, கல்லுக்குழி, திருச்சி - 20. பி. மணிகண்டன், எம்.பி.ஏ., நெ.6/27, சங்கர் நாயக்கர் தெரு, கல்யாணசுந்தரபுரம், மதுரை ரோடு, திருச்சி – 08. எம். சிபிராஜ், எம்.ஏ., நெ.3/284, வடக்கு பிள்ளையார் கோவில் தெரு, வடக்கு காட்டூர், திருச்சி - 19. க. சந்திரசேகர், எம்.பி.ஏ., நெ.23, நரசிம்ம நாயுடு தெரு, மரக்கடை, திருச்சி – 08.

**தூத்துக்குடி வடக்கு மாவட்டம்**
**தூத்துக்குடி மாநகரம்**

**அமைப்பாளர் :** பொ. வினோத் கண்ணன், டி.எச்.எம்., நெ.15, நாடார் தெரு, தூத்துக்குடி – 1.

**துணை அமைப்பாளர்கள் :** எஸ். கந்தசாமி, பி.இ., 6.107ஜெ/1ஜி/18, டி.எம்.பி. காலனி, 5வது தெரு, தூத்துக்குடி - 8. செ. கார்த்திகேயன், டி.சி.இ., நெ.3பி/63, பிரையண்ட் நகர் 13வது தெரு, பாரதி நகர், தூத்துக்குடி - 8. ஏ. அர்ஜீன், பி.இ., நெ.1இ/1, சுந்தரவேல்புரம் 2ம் தெரு, தூத்துக்குடி - 2. சத்யா ஈஸ்வரி, பி.எஸ்.சி., நெ.3ஏ/363, இந்திரா நகர், எப்.சி.ஐ. குடோன் எதிரில், தூத்துக்குடி - 8. வே. பாலமுருகன், பி.ஏ., நெ.66/ஏ, போல்டன்புரம் 2ம் தெரு, தூத்துக்குடி - 3.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18
நாள்- 24.08.2024

சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி